1st March 1968]

சங்கரன் கோவில் மருத்துவச்சாலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி ஜில்லா சங்கரன் கோவில் மருத்துவச்சாலை சென்ற ஒரு வருடமாக பெண் மருத்துவர் இல்லாமல் இயங்கி வருகிறதா?

(இ) 19-9-1967 முதல் ஆண் மருத்துவரும் இல்லையென்பது உண்மையா?

(உ) மற்ற ஆஸ்பத்திரிகளில் இந்த நிதியாண்டு ஆரம்பத்தில் இன்னும் எத்தனை இடங்களில் டாக்டரில்லை?

மாண்புபுமிகு திரு. எ. முத்துசாமி : (அ) (இ) இல்லை.

(உ) விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவையின் முன் வைக்கப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர்வர்களே, இந்த பதிலில் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இந்த விவரங்கள் எப்போது சேகரிக்கப்படும்? எப்போது இந்த அவையில் வைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் ஏராளமான கேள்விகளை அனுப்புகிறார்கள். அதுவும் கடைசி நேரத்தில் அனுப்புகிறார்கள். இவைகளுக்கு தகவல் கேட்டு மாவட்டங்களுக்கு அனுப்பி அங்கிருந்து பதில் வருவதற்கு தாமதமாகிறது. அவைகள் வந்தவுடன் இந்த மன்றத்தில் வைக்கப்படும்.

Government Hospital, Shencottah

*148. —Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether a lady doctor has not been appointed for the past few months in the Government hospital, Shencottah, Tirunelveli district ;

(*b*) whether it is a fact that the male doctor working in that hospital is often attending the courts ; and

(*c*) whether the Government are aware of the fact that the public are affected without getting medical aid as the doctor was not in station most of the days during the last 3 months ?

செங்கோட்டை அரசினர் மருத்துவ மனை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) திருநெல்வேலி மாவட்ட செங்கோட்டை அரசினர் மருத்துவ மனையில் சில மாதங்களாக பெண் டாக்டர் நியமிக்கப்படவில்லையா?

(இ) அங்குள்ள ஆண் டாக்டரும் அடிக்கடி நீதிமன்றத்திற்குப் போய் விடுகிறாரென்பது உண்மையா ?

(உ) சென்ற 3 மாத காலமாக பெரும்பாலான நாட்கள் டாக்டரின்றி பொது மக்கள் பாதிக்கப்பட்டது அரசு அறியுமா?

[1st March 1968

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஆம்.

(இ) மருத்துவ அதிகாரிகள் நீதிமன்றங்களிலிருந்து அவர்களுடைய வருகையைக்கோரும் நீதிமன்ற அழைப்புக்கட்டளையை (Summons) பெறும்போது அவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க முடியாது.

(உ) செங்கோட்டை அரசாங்க மருத்துவமனையில் ஒரு பெண் டாக்டரை நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, டாக்டர்கள் நீதிமன்றங்களுக்கு விசாரணைக்குப் போகும்போது விசாரிக்காமல் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். அதன் காரணத்தால்தான் அவர்கள் ஆஸ்பத்திரி வேலைகளை கவனிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க டாக்டர்கள் விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு வரும்போது அவர்களை உடனடியாக விசாரித்து அனுப்பிவிட வேண்டுமென்று நீதிமன்றத்திற்கு அரசாங்கம் ஏதாவது தெரியப்படுத்துமா?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : நீதிமன்றங்களில் விசாரணை நடப்பது அந்த வழக்கின் தன்மையைக் குறித்ததாகும். ஆகவே நீதிமன்றத்திற்கு கட்டளையிடுவது என்பது முறையானதல்ல.

Mr. CHAIRMAN : Questions are overs The call attention notice under rule 42is postponed.

[N.B.—Asterisk (*) at the commencemant of a speech indicates revision by the Member.]

II.—POINT OF INFORMATION *re* -ANSWERS TO QUESTIONS ADDRESSED TO THE HON. THE CHIEF MINISTER.

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களின் கேள்விகள் எல்லாம் அவர் உடல் நலமில்லாத காரணத்தால் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன. கல்வி அமைச்சர் அவர்களும் வரவில்லை. இதனால் பல கேள்விகள் மறந்து போகின்றன. ஆகவே மற்ற அமைச்சர்களாவது பதில் சொல்லும் வகையில் ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

திரு. கே. பாலசுப்பிரமணிய அயர் : தலைவரவர்களே, இது மன்றத்திற்கு கஷ்டமாகும். உபகேள்விகள் போடும்போது, பதில் சொல்ல சிரமம் ஏற்படும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இன்று போடப்பட்டுள்ள முதலமைச்சர் கேள்விகளுக்கெல்லாம் நாளையதினம் கூடுமானவரை பதில் கொடுப்பதற்கு முயற்சி செய்கிறேன்.

III. GOVERNMENT MOTIONS.

(1) Election of nine members to the Committee of Privileges.

The Hon. Thiru M. KARUNANIDHI : Sir, I move—

That with reference to Rule 156 of the Madras Legislative Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect nine Members to be Members of the Committee of Privileges for the financial year 1968–69.